# DEPOSITION OF WITNESS

(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.215/2025 | Date | : 28.10.2025 |
| Deposition of Witness for | : அ.சா.1 | Taluk | : |
| Name | : அய்யாவு | Calling | : |
| Father Name | : கந்தசாமி | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.10.2025.

(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், நாட்டாம்பாளையத்தில் வசித்து லாரி ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். கடந்த 07-05-2025 ம் தேதி, மாலை சுமார் 06.45 மணியளவில் எனது தந்தை கந்தசாமி வெப்படையில் உள்ள விக்டோரியா மில்லில் வேலையை முடித்துவிட்டு சைக்கிளில் ஈரோடு to சங்ககிரி செல்லும் சாலையில் ரோட்டை கடந்து எனது வீட்டிற்கு வருவதற்காக வந்துகொண்டிருந்தபோது, ஈரோட்டில் இருந்து வந்த ஒரு இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக எனக்கு தகவல் சொன்னார்கள்.

2) நான் சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது விபத்தில் எனது தந்தைக்கு தலையில் பலத்த அடிப்பட்டிருந்தது. விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனம் நிற்காமல் சென்றுவிட்டதாக கூறினார்கள். பின்னர், அவரை ஆம்புலன்ஸ் மூலம் சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர், மருத்துவர்கள்

எனது தந்தை இறந்துவிட்டதாக கூறினார்கள். பின்னர், இது சம்பந்தமாக சங்ககிரி காவல் நிலையத்தில் எழுத்துபூர்வமான புகார் ஒன்று கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**குறுக்கு விசாரணை** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-Ayyavu

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | |
|---|---|---|---|
| Case No | : C.C.215/2025 | Date | : 28.10.2025 |
| Deposition of Witness for | : அ.சா.2 | Taluk | : |
| Name | : முத்துசாமி | Calling | : |
| Father Name | : ராஜாகவுண்டர் | Religion | : |
| Village | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 28.10.2025.
(எதிரி ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை :**

1) நான் தற்போது சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், நாட்டாம்பாளையத்தில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 07-05-2025 ம் தேதி, மாலை சுமார் 06.45 மணியளவில் எங்கள் ஊரை சார்ந்த கந்தசாமி என்பவர் சைக்கிளில் நாட்டாம்பாளையம் பிரிவு வரும்போது, ஒரு இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டுவிட்டது.

2) இது சம்பந்தமாக மறுநாள் காலை சுமார் 08.15 மணியளவில் போலிசார் சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். பார்வை மகஜரில் நானும், ராஜா என்பவர் சாட்சி கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1 வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். 2 வது சாட்சி கையொப்பம் ராஜா என்பவருடையது ஆகும். ( **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :-

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பு அளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Muthusamy